# SCHOOL OF ARTS AND SCINECE

## AV Campus, Paiyanoor - 603 104

| | | |
|---|---|---|
| **Title of the Event** | **:** | **Inauguration of IAS Academy** |
| **Date** | **:** | 31.01.2023 |
| **Venue** | **:** | Indoor Auditorium |
| **No. of Participants** | **:** | 550 |




School of Arts and Science (SAS) of Vinayaka Mission Research Foundation organised an Awareness Programme on Civil Services Examination and Inauguration of IAS Academy on 31st January 2023 at the Indoor Auditorium of AV Campus by 09.30 am. The resource person, **Thiru. K. S. Kandasamy, IAS, Managing Director, Tamilnadu Adi Dravidar Housing and Development Corporation Limited (TAHDCO),** gave an






enlightening talk about the path towards civil service and its challenges. He also gave some pointers on preparing for civil service exams; he used his own life experiences as inspirational examples to dispel the doubts and misgivings of many aspirants. At the end of the session, he clarified the doubts of many civil service aspirants. Students from all departments of School of Arts and Science participated and benefitted from the programme. Dr. Nazeema T H, Director, SAS graced the programme with her presence.











## பையனூர் ஆறுபடை வீடு கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் பணி தேர்வு பயிற்சி தொடக்க விழா மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி




செங்கல்பட்டு, பிப். 2

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த பையனூர் விநாயகா மிஷன் ஆராய்ச்சி நிறுவனம் ஆறுபடை வீடு தொழில்நுட்ப வளாகத்தில் கலை மற்றும் அறிவியல் புலத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் பணி தேர்வு பயிற்சி தொடக்க விழா மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 31.01.2023அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலை மற்றும் அறிவியல் புலத்தின் இயக்குநர் முனைவர் எச்.நசீமா தலைமையுரையாற்றியதோடு சிறப்பு விருந்தினர்கள் பற்றிய அறிமுக உரையினையும் வழங்கினார். அதனை தொடர்ந்து வணிக மேலாண்மைத் துறையின் இயக்குனர் பாலகணபதி வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார். தொடர்ச்சியாக, தமிழ்நாடு ஆதிதிராவிட நலத்துறை மற்றும் வீட்டு வாரிய மேம்பாட்டுத் துறையின் நிர்வாக இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு தன்னம்பிக்கைவழங்கியதோடு தான் கடந்து வந்த பாதையின் தன்மைகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள். கடின உழைப்பும் விடா முயற்சியுமே வெற்றிக்கான தாரக மந்திரம் என்பதனை மாணவர்களுக்கு உணர்த்தியதோடு தன்னம்பிக்கை பேச்சின் மூலமாக மாணவர்களை ஊக்கப்படுத்தினார்கள். உரையின் நிறைவாக மாணவர்களுக்கு ஏற்பட்ட ஐயங்களுக்கு விடையளித்ததோடு விழா இனிதே நிறைவு பெற்றது.

# தமிழ்சுடர்

எவர்ஷைன் NEWS ™
REG NO: 2018105816

31.01.23




செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அடுத்த பையனூரில் உள்ள விநாயகா மிஷன் ஆராய்ச்சி நிறுவனம் ஆறுவடை வீடு தொழில்நுட்ப வளாகத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் பணி தேர்வு பயிற்சி,(IAS) தொடக்க விழா மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் இயக்குநர் முனைவர் நசீமா தலைமையில் வணிக மேலாண்மைத் துறையின் இயக்குனர் பாலகணபதி வாழ்த்துரை வழங்கினார், இதன் தொடர்ச்சியாக, சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தமிழ்நாடு ஆதித்திராவிட நலத்துறை மற்றும் வீட்டு வாரிய மேம்பாட்டுத் துறையின் நிர்வாக இயக்குநர் K.S.கந்தசாமி IAS அவர்கள் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை வழங்கியதோடு தான் கடந்து வந்த பாதையின் தன்மைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.இதில் பேராசிரியர்கள் மாணவர்கள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

செய்தியாளர் பிரகாஷ்